[23rd February 1955

Amendment to Darkhast Rules

* 881 Q.—Sri K. C. GOPALAN UNNI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any amendment was made to the Darkhast Rules to the effect that any person possessing 25 acres and more of sivaijama holdings will be evicted unconditionally, if he was found possessing other Government lands; and if so, when;

(*b*) whether the rule as amended is in vogue now;

(*c*) if not, when it was revoked; and

(*d*) the reasons for revoking it?

The Hon. Sri M. A. MANICKAVELU :—" (*a*) No such amendment was made.

" (*b*) *to* (*d*) Does not arise."

Mr. SPEAKER :—" Questions are over."

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—MOTION UNDER RULE 40 *RE* HARASSMENT OF HARIJANS OF ITCHIPUTHUR, NORTH ARCOT DISTRICT, BY POLICE.

Mr. SPEAKER :—" The hon. Member, Sri Ratnam, has given notice of a motion under Rule 40 of the Assembly Rules. The motion reads as follows :—

' That the Police authorities harassed the Harijans of Itchiputhur, North Arcot district, and disturbed the marriage parties with lorry loads of armed Police both in day time and in the night, calling the marriage parties to the Police Station unnecessarily demanding execution of bonds in a sum of Rs. 200 from each Harijan member, banning a social drama by the Harijan young school students on account of false allegation of the concerned Sub-Inspector of Police, Arkonam taluk station, on 10th February 1955. "

9-34 a.m, Sri A. RATNAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இருக்கும் பிரச்னையானது மிக மிக முக்கியமானது. 1955-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 10-ம் தேதி சர்க்கார் சார்பில் நடந்துகொண்ட ஒரு முக்கியமான விஷயம். சர்க்கார் அதிகாரிகள் பல காரணங்களைக் கொண்டு பல முனைகளில் ஒரு சமுதாயத்திற்கு பெரிய தீங்குகளை விளைவிப்பதாக இருக்கிறது. நம் நாட்டில் இப்பொழுது பழங்குடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் பத்து வருஷ சலுகையும் கொடுத்திருக்கிறார்கள்."

Mr. SPEAKER :—" நீங்கள் விஷயத்தை மட்டும் சொல்ல வேண்டும். அதற்குத்தான் பதில் சொல்வார்கள்."

Sri A. RATNAM :—" 1955-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 10-ந்தேதியன்று அரக்கோணம் பக்கத்தில் இச்சிப்புத்தூர் என்ற கிராமத்தில் இரண்டு கலியாணங்கள் அங்குள்ள சேரியில் நடந்தன. அந்த இச்சிப்புத்தூர் வாசிகளுக்கு அந்த பிராந்திய சப்-இன்ஸ்பெக்டரும், ரிவினியூ இன்ஸ்பெக்டரும் கொடுத்து வந்த தொந்தரவுகள் இவ்வளவு அவ்வளவு அல்ல. அவைகளில் குறிப்பாக ஒன்றைப் பற்றி சொல்ல விரும்புகிறேன்.

23rd February 1955] [Sri A. Ratnam]

"ட்ராமடிக் பர்பார்மன்ஸ் சட்டத்தின் சாக்கை வைத்துக் கொண்டு அந்த சேரியில் நடைபெறவேண்டிய திருமணத்தை தடை செய்திருக்கிறார்கள். திருமணத்தில் ஈடுபட்டிருக்கும் முக்கியமானவர்கள் அனைவரையும் முன் இரவில் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று திருமணம் நடைபெறாதபடி செய்திருக்கிறார்கள். 'துரோகி யார்' என்ற நாடகம் நடத்தப் போவதாக பிரசுரம் செய்யப்பட்டிருந்தது. இதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு நாலைந்து பேர்களிடத்தில் கையெழுத்து வாங்கி அந்த நாடகத்தைத் தடை செய்திருக்கிறார்கள். திருமணத்திற்கு முதல் நாள் இரவே திருமண தம்பதிகளை அழைத்துச் சென்று ஸ்டேஷனில் வைத்திருந்தார்கள். அதுமட்டுமல்ல. ஒரு நாடகத்தை தடை செய்ய வேண்டுமென்றால் அதை யார் நடத்துகிறாரோ அவரைத் தான் தடை செய்ய வேண்டும். ஆனால் அங்குள்ள சப்-இன்ஸ்பெக்டர் ஒரு சமூகத்தையே தடை செய்திருக்கிறார். இந்த அளவில் நாம் இயற்றப்படும் சட்டங்கள் கிராமங்களில் போலீஸ் அதிகாரிகளால் அமுல் செய்யப்படுகிறது. அந்த சட்டம் அமுலாக்கப்பட்ட காலத்தில் கனம் மந்திரி அவர்கள் 'இந்த சட்டத்தை துஷ்பிரயோகம் செய்ய மாட்டார்கள்' என்று உறுதி கூறினார். ஆனால் இப்பொழுது அந்த சட்டத்தை வைத்துகொண்டு பழி வாங்குகிறார்கள். இதைப்பற்றி பூரா விவரத்தை எடுத்துக் கூற வேண்டுமென்றால் அதற்கு எனக்கு நேரம் கிடையாது. அதனால் குறிப்பிட்ட சில கஷ்டங்களை மட்டும் எடுத்துக் சொல்ல விரும்புகிறேன். போலீஸ் அதிகாரிகள் பழங்குடி மக்கள் மேல் அநியாயமான கேஸ்கள் தொடுத்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய தீர்ப்புகள் கோர்ட்டுகளில் கொடுத்திருக்கின்றார்கள். பொது மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் பணத்தை வாங்கிக்கொண்டு இந்த போலீஸ் அதிகாரிகள் பொது மக்களுக்கு விரோதமாக காரியங்களைச் செய்து கொண்டு வருகிறார்கள். ஆதி திராவிடர்கள்மேல் பொய் கேஸ்கள் தயாரித்திருக்கிறார்கள், இப்படி பொய் கேஸ்கள் போட்டிருப்பதை ஆட்சியாளரிடம் சொல்லியும் பலன் அடையவில்லை. பொது மக்களுடைய நலனுக்காகத் தான் நாம் இங்கு சட்டங்களை இயற்றுகிறோம். மக்களுக்கு அளிக்கப்பட்ட அநீதிகள் எவ்வளவு இருந்தாலும் நூற்றுக்கணக்கான மனுக்கள் அதிகாரிகளுக்கு வந்தாலும் அதிகாரிகளின் ரிப்போர்ட்டை நம்பிக்கொண்டு மந்திரிகள் இருந்துவிடுகிறார்கள். நாட்டுப் புறங்களில் மக்கள் தொல்லைப் படுகிறார்கள். சீரழியப்படுகிறார்கள். ஏழைகளின் வீடுகளைக் கொளுத்துகிறார்கள், கொலை செய்கிறார்கள், கொள்ளை அடிக்கிறார்கள். இச்சிப்புத்தூரில் டிசம்பர் மாதத்தில் ஒருவருடைய மனைவி இறந்து போய் விட்டாள். உடனே . . ."

THE HON. SRI C. SUBRAMANIAM :—"Sir, it should be a statement of the facts and should not relate to the question of how Harijans are being treated."

MR. SPEAKER :—"நீங்கள் இப்பொழுதுள்ள விஷயத்தைப் பற்றி தான் சொல்ல வேண்டும். அதிகமாக சொல்லக்கூடாது."

SRI A. RATNAM :—"சுமார் 20 தீர்ப்புகள் இருக்கின்றன, இப்படி பொய் கேஸ்கள் தொடரப்பட்டதாக. அவைகளில் சிலவற்றை மட்டும் குறிப்பிடவேண்டும் என்று குறிப்பிட்டேன். அங்குள்ள சப்-இன்ஸ்பெக்டர் அந்த நாடகத்தைத் தடை செய்ய வேண்டும் என்று நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார். அந்த நாடகத்தை நடத்துகிறவர்கள் சுவாமிநாதன் இசை மன்றம் என்ற ஒரு சங்கம். அவர்கள் மீது யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. நடத்துகிற நாடகத்தின் ஒரு பெயரை வைத்துக் கொண்டு 'யார் துரோகி' என்ற வார்த்தையை வைத்துக்கொண்டு அதை தடை செய்திருக்கிறார்கள். அதற்கு ராணிப்பேட்டை முதல் மாஜிஸ்ட்ரேட்டினிடம் ஒரு உத்தரவும் வாங்கி தடைசெய்திருக்கிறார்கள். பிறகு விளம்பரம் செய்யப்பட்டது. நாடகத்தை நடத்தக் கூடாது என்று 20 தினங்

களுக்கு முன்பு சொல்ல வேண்டும் என்று உத்தரவு இருக்கிறது. ஆதி திராவிட மக்கள் ஆயிரக்கணக்கான பணத்தை செலவு செய்து அதை நடத்தவேண்டும் என்று ஏற்பாடு செய்திருந்தார்கள்."

Mr. SPEAKER :—"திருப்பித் திருப்பிச் சொல்லாமல் ஒழுங்காக சொல்லுங்கள்."

Sri A. RATNAM :—"அந்த நாடகத்தை நடத்தும் 15 வயதுள்ளவர்களை தடை செய்யவில்லை. மாணவர்களை தடை செய்யவில்லை. ஆனால் அதற்குக் காரணமாக இருந்த அந்த திருமண தம்பதிகளையும் உற்றார் உறவினரையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். பல ஹிம்சைகளைக் கொடுத்திருக்கிறார்கள். இரவு ஒரு மணி வரையில் அவர்களை ஸ்டேஷனில் நிறுத்தி வைத்து வதை செய்திருக்கிறார்கள். இவ்வளவு மோசமான நிலைமையில் போலீஸ்காரர்கள்
9-40 a.m. அந்த திருமணம் நடக்கக் கூடாது என்று தடை செய்திருக்கிறார்கள். திருமணத்தன்றும்கூட திருமணம் நடைபெற முடியாதபடி ஹரிஜனங்களைத் துன்பப்படுத்தியிருக்கிறார்கள். மறுநாளும்கூட அவர்கள் அப்படியே செய்திருக்கிறார்கள்."

Mr. SPEAKER :—"நீங்கள் சர்க்காருடைய கவனத்தைக் கவரும்படி ரொம்ப சுருக்கமாகச் சொல்லுங்கள்."

Sri A. RATNAM :—"நான் சுருக்கமாகத்தான் சொல்லுகிறேன். சர்க்காருக்கு இவ்விஷயத்தை நன்கு விளக்க வேண்டுமென்றால் இவை யாவும் சொல்லித்தானாகவேண்டும். நாடகத் தடை மசோதாவைத் துணையாகக்கொண்டு அன்றைக்கு அவர்கள் நாடகத்தை மாத்திரம் தடை செய்யவில்லை. திருமணம் நடக்க முடியாதபடி பல இடைஞ்சலை செய்திருக்கிறார்கள். அவர்களிடம் 200 ரூபாய்க்குப் பத்திரம் எழுதி வாங்கியிருக்கிறார்கள். நாடகம் குற்றமானதாக இருந்தால் யார் நாடகத்தை நடத்தப் போவதாக இருந்தார்களோ அவர்களைத் தடை செய்திருக்கலாம். ஆனால் கல்யாணத் தம்பதிக்குத் துன்பம் கொடுத்திருக்கிறார்கள். அந்த நாடகத்தை நடத்தக் கூடாது என்று இருபது நாட்களுக்கு முன்பே சொல்லியிருந்தாலும் ரொம்ப நலமாக இருந்திருக்கும்."

Mr. SPEAKER :—"நீங்கள் முன்பு சொன்னவற்றையே திருப்பித் திருப்பிச் சொல்லாதீர்கள்."

Sri M. D. THIAGARAJA PILLAI :—"**On a point of order,** கனம் சபா நாயகர் அவர்களே, திருமணத்தில் சம்பந்தப்பட்டவர்களை ஸ்டேஷனுக்கு அழைத்துப் போன நேரம் என்ன, எவ்வளவு நேரம் ஸ்டேஷனில் வைக்கப்பட்டிருந்தார்கள் என்பதையெல்லாம் அறிய விரும்புகிறேன்."

Mr. SPEAKER :—"இதுதானா **Point of order ?**"

Sri M. D. THIAGARAJA PILLAI:—"இல்லை பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் (சிரிப்பு)".

Sri P. CHELLATHURAI :—"ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர். முக்கியமான மசோதாக்களைப்பற்றி விவாதம் நடத்துகின்ற காலத்தில் அங்கத்தினர்கள் பேசும் நேரத்தைக் கட்டுப்படுத்த தங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அதே போல் சட்டசபை விதி 40-படி சபையில் ஒரு பிரச்னையைக் கொண்டு வந்தால் அதைக் கொண்டு வந்த அங்கத்தினர் இத்தனை நிமிஷத்திற்குள் பேசி முடித்துவிட வேண்டுமென்று சொல்ல கனம் சபா நாயகர் அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறதா என்று அறிய நான் விரும்புகிறேன்."

Mr. SPEAKER :—"அந்த அதிகாரம் சபாநாயகருக்கு இருக்கிறது."

23rd February 1955]

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, This Itchiputhur is a village situated in . . . "

SRI M. D THIAGARAJA PILLAI :—" கனம் நிதி மந்திரி அவர்கள் தமிழிலேயே பேசினுல் எங்கள் எல்லோருக்கும் அது நன்ருகப் புரியும்." ஆகவே அவரைத் தமிழில் பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். 9-44 a.m.

THE HON. SRI C. SUBRAMANIAM :—" நான் தமிழிலேயே பேசுகின்றேன். கனம் சபாநாயகர் அவர்களே . . . . "

SRI A. RATNAM :—" Sir, on a point of order. I have not finished my speech."

MR. SPEAKER :—" I cannot allow it. The hon. Member will please resume his speech."

*THE HON. SRI C. SUBRAMANIAM :—" கனம் சபா நாயகர் அவர்களே, இந்த இச்சிப்புத்தூர் கிராமம் அரக்கோணம் தாலூக்காவில் இருக்கிறது. திருத்தணியிலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள கிராமம். இதில் ஆயிரத்து ஐநூறு ஹரிஜனங்கள் இருக்கிருர்கள். அதே போல ஆயிரத்து ஐநூறு வேறு ஜாதிகளைச் சேர்ந்தவர்களும் இருக்கிருர்கள். இதிலே ஹரிஜனங்களுக்கும், மற்ற ஜாதி ஹிந்துக்களுக்கும் 1946-ம் வருஷத்திலிருந்தே மனவிரோதம் இருந்து வந்து கொண்டிடிருக்கிறது. 1952–53-ம் வருஷத்திலே அந்த கிராமத்தில் பல திருட்டுகள் பல வேறு தொந்தரவுகள் ஆகியவை நடந்து இருக்கின்றன. இது சம்பந்தமாக முப்பது ஹரிஜனங்களின் பேரில் கேஸ்கள் போடப்பட்டன."

SRI M. KALYANASUNDARAM :—" ப்ரைவேட் கேஸா, கவர்மெண்டு கேஸா ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" இதில் முப்பது petty கேஸ்கள் போடப்பட்டன என்று இருப்பதால் தனிப்பட்டவர்கள் கேஸ்களாகத் தான் இருக்க வேண்டும். தொடரப்பட்ட கேஸ்களில் பாதி கேஸ்கள் ருஜுவாகி குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சில கேஸ்கள் சரியாக ருசுவாகாததால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. இதுபற்றி தான் ஸ்ரீ ரத்தினம் குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன்.

" அதற்கு பிற்பாடு 1954-ம் வருஷத்திலே நிலைமை ரொம்ப மோசமாகப்போய் ஹரிஜனங்களிடம் கிராம அதிகாரிகளும், ரெவினியூ அதிகாரிகளும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் பயன்படாது போகவே க்ரிமினல் ப்ரோசீஜர் கோட் 107-வது பிரிவுப் பிரகாரம் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு கோர்ட்டிலே கூட 7 பேர்கள் பேரில் தாவா செய்யப்பட்டு இன்னும் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. முடிவாகவில்லை.

" கனம் அங்கத்தினர் குறிப்பிட்டிருக்கிற நிகழ்ச்சி 10-2-55-ந் தேதி நடந்திருக்கிறது. அன்றைக்கு நடப்பதாக இருந்த கல்யாண அழைப்பில் க்ரிமினல் ப்ரோசீஜர் கோட் 107-வது பிரிவின்படி எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட ஒரு வரும் இருக்கிருர். அதோடு திருமண தினத்தன்று இரவு அந்தக் கல்யாணத்தையொட்டி 'யார் துரோகி', என்ற ஒரு நாடகம் நடத்தப் போவதாகவும் காணப்பட்டிருக்கிறது.

" இந்த 10-2-55-ந் தேதிக்குப் பத்திருபது நாட்களுக்கு முன்பே அதாவது குறிப்பாக ஜனவரி 20-ந்தேதியன்றே இச்சிப்புத்தூர் கிராம ஹரிஜனங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, மற்ற ஹிந்துக்களுக்கு ஹானி விளைவிக்கப் போவதாக முடிவு செய்திருப்பதாகும் ஒரு செய்தி போலீசாருக்கு வந்திருக்கிறது.

"அதற்கு மேல் 10–2–55-ந் தேதி அன்று நடித்துக் காட்டப்படுவ தாக இருந்த நாடகத்தில் ரெட்டிப் பெண்கள் ஹரிஜனப் பிள்ளைகளை தகாத காரியத்திற்கு அழைக்கின்ற மாதிரியான ஒரு காட்சி சித்தரித்துக் காட்டப் போவதான செய்தியும், அதைத் தடுக்கவேண்டுமென்ற கோரிக்கை யும் போலீஸாருக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது.

"ஸ்ரீ ரத்தினம் அவர்கள் பேசும்பொழுது இந்த நாடகத்தைத் தடை செய் யும் நோக்கத்தில் **lorry load of armed Police** அந்த ஊருக்குச் சென்று ஹரிஜனங்களை இம்சித்ததாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் அன்றைக்கு அந்த ஊருக்குப் போனது அரக்கோணம் சப் இன்ஸ்பெக்டரும் சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், நான்கு ஹெட் கான்ஸ்டே பிளும் தான். அதற்கு முக்கியமான காரணமும் இருக்கிறது.

"அன்றைக்கு இரு கல்யாணங்கள் நடக்க வேண்டியிருந்திருக்கிறது. கல்யாணம் நடக்க வேண்டியது முக்கியமே தவிர நாடகம் நடக்க வேண்டும் என்பதில்லை. அந்த நாடகத்தால் கல்யாணமே நின்று போகும்படியான கலவரம் ஏற்படும் என்கின்ற நிலைமை வந்ததின் காரணமாகவே அம்மா திரி கலவரம் எதுவும் வராமலிருப்பதற்காகப் போலீஸார் அந்த ஊருக்கு சென்றிருக்கிறார்கள். அதே போல கலவரம் எதுவும் இல்லாமல் கல் யாணத்தை முடித்து வைத்துவிட்டும் திரும்பி வந்திருக்கிறார்கள்.

"அப்படியிருக்கும்போது தவறான செய்திகளை வைத்துக் கொண்டு ஸ்ரீ ரத்தினம் இப்படிப் பேசுவது சரியல்ல. அவர் பேசியதிலிருந்து தவறான செய்திகளே அவரிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பது நன்கு தெரிகிறது. எப்படி யிருந்தாலும் இது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருப்பதால் அதிகாரிகள் நேரில் சென்று விசாரித்து வந்திருக்கிறார்கள். அதோடு அந்தச் சம்பவத்தைப் பற்றி கலெக்டரையே விசாரிக்கும்படியும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

"இதில் எவ்விதமான இம்சையும், துன்பமும், ஹரிஜனங்களுக்கு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள அரசாங்கம் இருக்கிறது. அரசாங்க அதிகாரிகளும் இருக்கிறார்கள். அன்றைய தினம் பெரிய கலவரம் நடந்து அந்தச் சேரிகளில் கல்யாணம் நடைபெறாமல் தடைப்பட்டுப் போகாதிருக்கவே போலீஸார்கள் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அமைதியான முறையில் அன்றைய தினம் அந்தத் திருமணங் களும் நடந்தேறியிருக்கின்றன. ஆகவே தனக்கு வந்த தவறான விஷயங்களை வைத்துக் கொண்டு ஸ்ரீ ரத்தினம் அவர்கள் சட்ட சபை விதி 40-ன் கீழ் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதற்கு வருந்துகிறேன். ஹரிஜனங்களுக்கு எவ்விதமான பாதுகாப்புகளையும் அளிக்கவே அர சாங்கம் விரும்புகிறது. அதற்காக அரசாங்கம்தான் தங்களை ஆதரிக்கி றார்களே என்ற எண்ணத்தில் ஹரிஜனங்கள் தங்கள் இஷ்டப்படி நடக்கக் கூடாது. தங்கள் இஷ்டப்படி பேசவும் கூடாது. பொது அமைதி யைக் காக்கும் வகையில் அவர்களும் சுமுகமான முறையில் நடந்து கொள்வது மிக அவசியம்.

"இதற்குமேல் நான் இவ்விஷயத்தில் சொல்லவேண்டியது எதுவு மில்லை. சட்டசபை விதிப்படி இதற்கு மேலும் ஸ்ரீ ரத்தினம் அவர்கள் பேசு வதற்கு ஒன்றுமில்லை என்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்."

Sri A. Ratnam :—"கனம் சபாநாயகர் அவர்களே . . ."

Mr. Speaker :—"இனிமேல் ரூல் 40 படி நீங்கள் பேசமுடியாது. இதற்கு மேல் நீங்கள் வேண்டுமானால் இதைப்பற்றி ஷார்ட் நோட்டிஸ் கேள்வி கொடுங்கள்."

9-50 a.m. * **The Hon. Sri C. Subramaniam** :—"Sir, with reference to the motion under Rule 23 (1) of the Madras Assembly Rules, I have given notice of, namely, that this House do resolve to

23rd February 1955] [Sri C. Subramaniam]

transact Government business tomorrow, the hon. Deputy Leader of the Opposition and other Members feel that non-official work should be transacted tomorrow."

MR. SPEAKER :—" So, tomorrow will be a non-official day?"

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Yes, Sir."

III.—GOVERNMENT BILL.

THE MADRAS INDEBTED AGRICULTURISTS (REPAYMENT OF DEBTS) BILL, 1955—*cont.*

MR. SPEAKER :—" We shall now take up clause 3 of the Bill. I have received notice of an amendment from the hon. Member Sri P. Rangaswami Reddiar. The hon. Member is not in his seat and, therefore, his amendment is not moved. The Hon. the Minister for Finance will now move the Government amendment."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, I move the following amendments :—

'*In sub-clause* (1), for *the words* " *for payment of money* ", substitute *the words* " *in respect of a debt* ".

'*In Explanation II*, for *the words* " *for a sum of money* ", substitute *the words* " *in respect of a debt* ".

'*In Explanation II*, for *the words* " *for payment of money* " substitute *the words* " *in respect of a debt* ".

'After *the proviso*, add " *Provided further that nothing contained in this section shall apply to any portion of a decree other than that relating to a debt* ". ' "

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" I beg to move the following amendment :—

'*In sub-clause* (1), *lines* 5 *to* 7, omit *the words* " *and one-eighth . . . whichever is less* ".' "

SRI S. RAMALINGAM :—" I second the amendment."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" The amendment moved by the hon. Member Sri T. C. Narayanan Nambiar relates to clause 4 of the Bill. We are now discussing clause 3 of the Bill."

MR. SPEAKER :—" In that case, let him withdraw the amendment he has now moved."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" I am withdrawing the amendment I have just now moved."

SRI M. KALYANASUNDARAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் இப்பொழுது கொடுத்திருக்கக்கூடிய திருத்த மானது ஒரு வகையில் சிறந்ததாகத்தான் இருக்கிறது. ஆனால், நாங்கள் 9 53 a.m.